RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22292

# உளவியல் பார்வையில் பாரதிதாசனின் சமுதாயச் சிந்தனைகள்

**மு. கவிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# Social thoughts of Bharathidasan from a psychological point of view

**M. Kavitha** [a, *]

[a] Department of Tamil, Avinashilingam University, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: kavithasampath.m@gmail.com

Received: 19-09-2022
Revised: 23-11-2022
Accepted: 29-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Among the great poets of the 20th century, poet Bharathidasan's role is immense. Bharathidasan, thought of creating social revival like Bharathi. Bharathidasan set the pulse of the disillusioned society with his poetry. He devoted himself completely to the Tamil language and the Tamil nation, and touched the hearts of the learners by instilling social thoughts in his works. He is compared to bee like strolling in the garden of rationality. The purpose of this essay is to explore Bharathidasan's rationalist ideas and social revival ideas.

**Keywords:** Psychology, Caste division, Communalism, Feminism, Chastity, Remarriage, Incompatibility

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு பாடல் திறத்தைப் பண்படுத்திய சிறந்த கவிஞர்களுள் பாரதிதாசன் பங்கு மகத்தானது. விடுதலை வேட்கைக் கவியான பாரதியைப் போல சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கக் கருதிய பாரதிதாசனும் எக்காலத்திற்கும் உரியவராக விளங்கினார் (Tamilannal, 2000). பாரதிதாசன் தனது கவிதைத் திறத்தால் நம்பிக்கை இழந்து கிடந்து சமுதாயத்தின் நாடி நரம்புகளை முடுக்கிவிட்டார். பாரதிதாசனின் பகுத்தறிவுச் சிந்தனைகளையும் சமுதாய மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

## உளவியல் - விளக்கம்

உளவியல் என்பது மனிதனின் நடத்தை பற்றிய அறிவியல் துறையாகும். மனிதனின் நடத்தையை நிர்ணயிப்பதும் அவர்கள் உள்ளத்தில் புதைந்து கிடப்பனவற்றைப் புரிந்து கொள்வதுமே உளப்பகுப்பாய்வாகும். இலக்கியம் மனிதனின் வாழ்க்கை நிலைகளை பிரதிபலிக்கிறது. அது மனித மனத்தின் செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு படைப்புகளும் அவர்களின் அனுபவங்களின் வெளிப்பாடாகும். ஒவ்வொரு படைப்புகளும் அவர்களின் அனுபவங்களின் வெளிப்பாடாகும். இந்நிலையில் இலக்கியமும் உளவியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் விளங்குகின்றன.

## சாதி மத எதிர்ப்புச் சிந்தனைகள்

சாதிப் பிரிவினைதான் மக்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்தும் முதல் கருவி. மக்கள் குருதியால் கலக்கப்பட்டிருக்கும் நஞ்சு இயற்கையால் எவரும் உயர்ந்தவர் அல்லர். இதனையே பிறப்பொக்கும் எவ்வுயிருக்கும் என்கிறது வள்ளுவம் (Kalavathi, 2018). சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்| என்று பாரதி சாதிப் பிரிவினையைச் சாடுகிறார். தமிழ் மரபில் சாதி என்ற சொல்லே இல்லை என்ற கருத்தை முன்மொழிகிறார் பாரதிதாசன். ஆதியிலே இல்லாமல் பாதியிலே வந்தது இச்சாதிப் பிரிவினை என கடுமையாகச் சாடுகிறார்.

"மிக்குயர்ந்த சாதி - கீழ்ச்சாதி எனும்

வேற்றுமைகள் தமிழுக்கில்லை - தமிழர்க்கில்லை

பொய்க்கூற்றே சாதியெனல் ஆரியச்சொல்

புதுநஞ்சு பொன்விலங்கு பகையின் ஈட்டி

கடற்குமிழி உடைத்திடுக சாதி வீழ்க"

இத்தகைய சாதிப் பிளவுகளும், அதன் கொடுமைகளும் மனிதர்களுக்கும் மேலும் பேரழிவை ஏற்படுத்தும் (Suratha Kalladan, 2011). எனவே அக்கொடுமையை வேரோடு அழிப்பது தான் சிறந்த வழி என்று கருதிய பாரதிதாசன், மதம் ஒரு அபின் என்றார். கார்ல் மார்க்ஸ் பகுத்தறிவைப் பாழடித்துச் சீரழிக்கும் கருவியான மதத்தை ஒழிக்க வேண்டும் என்று பாவேந்தர் அறை கூவுகிறார்.

"திராவிடர்கள் முன்பே தம்பி, தெரிந்துணர்ந்த உண்மைடு

ஒரு மதமும் வேண்டாம் தம்பி, உண்மை யுடையார்க்கே

பெரு மதங்கள் என்னும் அந்தப் பேய் பிடிக்க வேண்டாம்"

மனிதனின் பகுத்தறிவுச் சிந்தனைகளை மயக்கும் மதங்களைப் பின்பற்றல் கூடாது என்று பாரதிதாசன் கருதினார். மதங்கள் மக்களிடையே மேலும் பிரிவை ஏற்படுத்தியதே தவிர, அன்பையும் அரவணைப்பையும் ஊட்டவில்லை. எனவே அவற்றை வேரோடு சாய்க்க வேண்டும் என்று போர்க்குரல் தருகிறார் (Suratha Kalladan, 2011).

"அள்ளும் வறுமை அகற்றாமல் இன்புவிக்குக்

கொள்ளைநோய் போல்மதத்தைக் கட்டியழும் வைதிகத்தைப்

போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்

வேரோடு பேர்க்க வந்த வீரா இளவீரா?"

போன்ற பாடல்கள் சாதி மதம் பிணிகள் ஏற்படுத்தும் பிரிவினையை ஒழிக்கும் அருமருந்தாகப் பயன்படுகின்றன என்று உணரலாம்(Suratha Kalladan, 2011).

## பொதுவுடைமைச் சிந்தனைகள்

எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்றான் பாரதி. அவர் வழி வந்த பாரதிதாசனிடம் வெளிப்படும் பொதுவுடைமைச் சிந்தனைகள் உழைப்பாள் சிறப்பையும் தொழிலாளர் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாக அமைகின்றது. தொழிலாளர் நலமே நாட்டின் உகந்த நலன் என்று கருதிய பாரதிதாசன் அவர்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளைக் கண்டு அஞ்சுகிறார்.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு

தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி

நெற் சேர உழுதமுது பயன் விளைக்கும்

நிறையுழைப்புத் தோள் களெல்லாம் பொன் தோள்கள்?

கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்

போய்எடுக்க அடக்குவ தெவரின் மூச்சு"

என உழைப்பையும், உழைப்பைப் பின்பற்றி வரும் தொழிலாளர்களின் உயர்வையும் சிறப்பாக எடுத்துரைக்கிறார். உழைப்பின்றேல் உலக மக்களும் அவர்தம் நாகரீகமும் சீர்குலையும் என்பதை பாரதிதாசன் கருத்தாக பெறலாகிறது (Suratha Kalladan, 2011). ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது, அந்நாட்டிலுள்ள மக்களின் முன்னேற்றமாகும். சமூகப் பொருளாதாரத் தாழ்வுகளால் நலிந்த மக்கள் சமுதாயம் மேல் உயர வேண்டும் என்பதே பாரதிதாசனின் கனவாகும். அதற்கு உழைப்பாளர் உயர்வையும், முதலாளி - தொழிலாளி பாகுபாடுகள் இவ்வையகத்தில் இருத்தல் கூடாது என்பதை வலியுறுத்தும் நோக்கில்,

"ஓடப்ப ராயருக்கும் ஏழையப்பா

உதையப்ப ராகிவிட்டால் ஒருநொடிக்கு

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி

ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா"

என்ற பாடல் மூலம் உணரலாம். இவ்வாறாக பாரதிதாசன் பொது உடைமைச் சிந்தனைகள் சாதி, சமூக இன்னல்களைக் களைந்து பொருளாதாரத்தில் அனைவரும் ஏற்றத்தாழ்வு இல்லாத உயர் நிலையை அடையும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக அமைகிறது (Suratha Kalladan, 2011).

## பெண்ணடிமை மறுப்பு

பெண்களுக்கு இருக்க வேண்டிய குணநலன்களாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என நான்கினைக் கூறுவார்கள் முன்னோர்கள். இவை பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன என்றும் அவை உடைத்தெரியப்பட வேண்டும் என்று கருதிய பாரதிதாசன்,

"அச்சமும் மடமையும் நீங்கிய பெண்கள்

அழகிய தமிழ்நாட்டின் கண்கள் என்று பாடுகிறார்

பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு

மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே"

மனைவி இறந்தால் வேறு ஒரு திருமணம் செய்து கொள்ள கிழவனுக்குக் கூட சமுதாயம் உரிமை தருகிறது (Suratha Kalladan, 2011). ஆனால் கணவனை இழந்த கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளத் தடுக்கும் கொடுமையைக் கண்டு உளம் வெதும்புகிறார். இந்தச் சமுதாய அவலத்தைச் சுட்டிக்காட்டும் வகையில்,

"பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்

பெருங்கிழவன் காதல்செய்ய பெண்கேட்கின்றான்

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்

மணவாளன் இறந்தால்பின் மணத்தல்தீதோ?

பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?"

என்ற பாடலின் மூலம் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைச் சித்தரிக்கிறார். பொருந்தாத் திருமணத்தை எதிர்த்த புரட்சிக் கவிஞர் பிணத்திற்கே திருமணம் செய்ய இளம் வாழைக்

கன்றை வெட்டுவதா என்று முழங்குகிறார் (Suratha Kalladan, 2011). ஆணுக்கும் சமூகத்தில் கிடைக்கும் உயர்வையும், ஏற்றத்தையும் கண்டு மனம் வெதும்பிய பாரதிதாசன் பெண் என்றால் பெண்ணே வெறுக்கும் சமூக அவலத்தையும் சித்தரித்து உள்ளார். இந்த நிலை நீங்க வேண்டும் என்றால், பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனக் கருதினார். கல்வி ஒன்றுதான் ஆண், பெண் ஏற்றத்தாழ்வை நீக்கும் முக்கியக் காரணியாக பாரதிதாசன் கருதுகிறார்.

## கைம்மை - இழிவு

தவறுகளும் குற்றங்களும் செய்கின்றவர்களுக்குத் தண்டனைகள் தரப்படலாம். ஆனால் செய்யாத தவறுக்காக எள்ளளவு கூட தொடர்பில்லாத செயலுக்காக வாழ்க்கை முழுதும் தண்டனையாக, அனுபவிக்கும் நிலைதான் கைம்மை. உடல் வழியான தண்டனைகளும் உண்டு. உள்ளம் உணர்ச்சி வழியிலான தண்டனைகளும் உண்டு. உடல் வருந்தும்படியாகத் தரையில் படுத்துறங்குவது, உடல் நலிவுறும் படியான உணவைச் சுருக்குதல் போன்றவையெல்லாம் உடல் வழியான தண்டனைகள்.

“தரையில் படுத்தல் வேண்டும்

சாதம் குறைத்தல் வேண்டும்”

என்று பாடுகிறார் பாவேந்தர் (Suratha Kalladan, 2011). உடலுக்கான தண்டனையுடன் உள்ளம் நலியும்படியான தண்டனைகளும் உண்டு. பூச்சூடுதல், நல்ல ஆடை அணிகலன் அணிதல் போன்றவற்றால் தனக்குத் தானே மகிழும் முருகியல் இன்பம், அழகுணர்ச்சி மறுக்கப்படுகிறது. அவள் மனம் நோகும்படியாகப் புறக்கணிப்பு, மங்கலச் செயல்களில் பங்கேற்கத் தடை, தீய சகுனம் என்ற அவமதிப்பு என்று அவள் உள்ளம் நசுக்கப்படுகிறது.

“திலகமோ குழலில் மலர்களோ அணியின்

உலகமே வசைகள்

பொன்னுடை பூசணங்கள்

போக்கினாலோ

புகினும் ஓர் அகம் சகுனம் தீது என

முகமும் கூசுவார் - மகளை ஏசுவார்

சமூகக் கொடுமை”

கைம்மை என்பது ஒரு பெண்ணின் தனிவாழ்வு சம்பந்தப்பட்ட ஒரு செயல் மட்டுமல்ல. அது ஒரு சமூகக் குற்றம். கைம்மை வாழ்வுக்குக் காரணமாக அமைவதும், கைம்மை வாழ்வை நெறிப்படுத்துவதும் சமூக மரபுகள் தாம். சமூக மரபு, பண்பாட்டு மரபு என்று ஏதாவது ஒன்றின் காரணமாக நிகழும் கொடுமையே கைம்மை. எனவே சமூக அமைப்பின் கருத்தியலை மாற்றுவதற்கான குரலைப் பாவேந்தர் எழுப்புகிறார். கைம்மை தோன்றுவதற்கான பரவலான காரணங்களுள் முக்கியமானவை பொருந்தாமணமும், குழந்தை மணமும் ஆகும்.

பொருந்தாமணம் என்பது வயதான ஒரு கிழவனுக்கு இளம்பெண்ணை மணம் செய்விக்கும் கொடுமையாகும். வயதான கிழவனுக்கு மணம் முடித்து வைக்கப்படும் ஓர் இளம்பெண், தன் காதலின்பத்தை இழப்பது மட்டும் அல்ல, விரைவிலேயே விதவை நிலையை அடைவதற்கும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறாள். எனவே இத்தகைய பொருந்தா மணத்தை மிகச் சினத்துடன் பாவேந்தர் சாடுகிறார்.

“மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக

மனம்பொருந்தா மணம் மண்ணாய்ப் போக

சமூகச் சட்டமே சமூக வழக்கமே

நீங்கள், மக்கள் அனைவரும்

ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே"

மூடத் திருமணத்தால் கைம்மை என்னும் நாசகரமான கத்தி தலை மேலேயே தொங்கிக் கொண்டிருக்கும் அவலம் நிகழ்கிறது என்று அவளுடைய மன உணர்வுகள் நசுக்கப்படுவதைப் பாவேந்தர் பாடுகிறார் (Suratha Kalladan, 2011).

## மறுமணம்

மனைவி இறந்த பின்பு கணவன் மறுமணம் செய்வதுபோல் கணவன் இறக்கும் போது மனைவியும் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பகிரங்கமாக வலியுறுத்தியவர் பாரதிதாசன்.

"துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்

தேடுமோர் ஆடவன்போல் - பெண்ணும்

துணைவன் இறந்தபின் வேறு துணை தேடச்

சொல்லிடுவோம் புவிமேல்"

கற்பு என்பதைப் பெண்ணுக்கு மட்டும் பொருத்திப் பார்த்தல் கூடாது. இதே கருத்தை பாரதி கற்பென்று வந்தால் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்று கூறியுள்ளார் (Suratha Kalladan, 2011).

"சொற்கண்டு மலைக்காதே உன் பகுத்தறிவால்

தோசம், குணம் அறிந்து நடப்பாய் - துயர் துடைப்பாய்

துணை பிடிப்பாய் - பயம் விடுவாய்"

சமூகத்தால் கொடுமைப்படுத்தப்படும் பெண்ணிற்கும் பகுத்தறிவை ஏற்றினால்தான் அவள் மூடப்பழக்கத்திலிருந்து விடுபட முடியும். பின்புதான் உண்மையான உன்னதமான உலகை அமைக்க முடியும். மூடர்களின் சொல் கேட்டு மலைக்கவும், பயமும் வேண்டாம். பெண்கள் மறுமணம் செய்வது இழிவானது. தகாத செயல் என்று சொல்லுபவர்கள் அறிவிலிகள். அதனால் அவர்கள் சொல் கண்டு மனம் கலங்க வேண்டாம் என்று குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

சமுதாயத்தின் அவலநிலைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் பாரதிதாசன் சாடுகிறார். விதவை மறுமணம், பாலியல் திருமணம் எதிர்ப்பு போன்றவை இவரது கவிதைகளில் பாடுபொருளாக அமைகின்றன. சமுதாயத்திற்குப் பயந்து தற்கொலை செய்யும் கோழைகளையும் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை. காதல் என்பது உயிரில் தோன்றும் இயல்பான உணர்வு. இது அனைவருக்கும் தோன்றும். இதை மறுக்கவோ எதிர்க்கவோ முடியாது. எதிர்த்தாலும் இறுதியில் காதலே வெல்லும். இன்பநிலையிலும் துன்பநிலையிலும் தமிழைப் பற்றிப் பாடுவதால் தமிழ்மேல் பாரதிதாசன் கொண்ட காதல் புலப்படுகிறது.

## References

Kalavathi, K. (2018) Ilakkiya Ilakanagalil Samuthaya Sinthanaikal, Pradag Printers, Coimbatore, India

Suratha Kalladan, (2011) Bharathidhasan Kavithaigal, Manivasagae Pathippagam, Chennai, India

Tamilannal, (2000) Puthiya Nokkil Tamil ilakiya Varalaru, Meenakchi Pathippagam, Madurai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License